# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(16.04.2022 முதல் 20.04.2022)

**அறிக்கை எண்: 30/2022** **தேதி : 15.04.2022**

### அரியலூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33 °செ முதல் 35 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 25 °செ முதல் 26 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### அரியலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (16.04.2022 முதல் 20.04.2022)

| கடந்த வார வானிலை (12.04.2022 முதல் 14.04.2022) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (16.04.2022 முதல் 20.04.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 12/04 | நாள்-2 13/04 | நாள்-3 14/04 | தேதி | நாள்-1 16/04 | நாள்-2 17/04 | நாள்-3 18/04 | நாள்-4 19/04 | நாள்-5 20/04 |
| 5.8 | 2.6 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 33 | 34 | 35 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 38 | 38 | 39 | 39 | 39 |
| 26 | 26 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 26 | 26 | 27 | 27 |
| 7 | 6 | 6 | மேகமூட்டம் (ஆக்டா) | 6 | 5 | 5 | 5 | 5 |
| 85-58 | 76-64 | 72-46 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-50 | 80-50 | 80-50 | 80-50 | 80-50 |
| 10 | 9 | 11 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 10 | 10 | 8 | 8 | 6 |
| கிழக்கு வட கிழக்கு | தென் தென் மேற்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | தெற்கு | தென் தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

### அரியலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 16.04.2022 முதல் 20.04.2022 ஆகிய தினங்களில் மழை இல்லை. அதிகபட்ச வெப்பநிலை 38 °செ முதல் 39 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 °செ முதல் 27 °செ ஆகவும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6-10 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பயறுவகை பயறுகள் | உளுந்து | உளுந்து மற்றும் பாசிபயறு செடிகளை அறுவடை செய்யவும் |
| | | ஓரிரு நாட்கள் செடிகளை நன்கு வெயிலில் காயவைத்து பின்பு பயறைப் பரித்தெடுத்து சுத்தம் செய்து ஈரப்பதம் 9 சதவீதத்திற்கு குறையும் வரை உலர்த்தி பின்பு சேமிக்கவும் |

| | | |
|---|---|---|
| | | எதிர்வரும் கோடை இறவை பருவத்தில் சாகுபடி செய்ய ஆடுதுறை 5 ஏற்ற இரகமாகும். |
| பசுந்தாள் பயிரகள் | | மண்ணின் ஈரத்தன்மையை பயன்படுத்தி பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைப்பூண்டு, சணப்பை மற்றும் கொழிஞ்சி போன்றவற்றைத் தெளிக்கவும். |
| கால்நடைகளுக்கு | மாடு | தற்போது வெப்பநிலை உயர்ந்து காணப்படுவதால் கால்நடைகளை காலை 6 மணி முதல் 10 மணிக்குள்ளும் மாலை 4 மணி முதல் 6 மணிக்குள்ளும் மேய்ச்சலுக்கு அனுமதிக்கவும். |

## குறுஞ்செய்தி

உளுந்து மற்றும் பாசிபயறு செடிகளை அறுவடை செய்யவும்

**இயக்குநர்**